


<u>செய்தி வெளியீடு எண்.55/2018                    நாள் 1.10.2018</u>

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரசார ஊர்தியை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (01.10.2018) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

தமிழகத்தில் பெருகி வரும் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வது மிகவும் அத்யாவசிய பணியாக உள்ளது. குறிப்பாக சென்னை மாநகரத்தின் வேகமான தொழில் வளர்ச்சி மற்றும் மக்கள் தொகை பெருக்கம் காரணமாக நீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நிலத்தடி நீரை அளவிற்கு அதிகமாக பயன்படுத்தி வருவதால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து

கொண்டு வருகிறது. மேலும், சென்னை மாநகரம் கடலோரப் பகுதியில் அமைந்துள்ளதால் அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீர் எடுப்பதன் மூலம், நகரின் சில பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்து நீரின் தரம் பாதிக்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகம் போற்றும் உன்னத திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டத்தை 2003 ஆம் ஆண்டில் ஒரு சிறப்பு அரசாணையின் மூலம், தமிழகத்திலுள்ள அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை கட்டாமயமாக்கி வெற்றிகரமாக செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டத்தின்படி சென்னை மாநகரில் உள்ள 9,00,000 வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக, 2003ஆம் ஆண்டில் இருந்த சராசரி நிலத்தடி நீர்மட்ட அளவானது 5.58 மீட்டர் உயர்ந்து தற்பொழுது 4.50 மீட்டர் என்ற நிலையில் உள்ளது. பல ஆண்டுகள் பருவமழை பொய்த்த நிலையிலும், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்ததற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திய மழைநீர் சேகரிப்புத் திட்டமே முக்கிய காரணமாகும்.

இதனை கருத்தில் கொண்டு எதிர்வரும் வடகிழக்கு பருவமழையின் மூலம் ஏற்படும் அதிகபட்ச நன்மைகளான நிலத்தடி

நீர்மட்டம் உயர்வு, நீரின் தன்மை மேம்பாடு, கடல் நீர் நன்னீருடன் ஊடுருதலை தடுத்தல் மற்றும் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்துதல் போன்ற பயன்களைக் கருத்தில் கொண்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் 2018 ஆம் ஆண்டிற்கான மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிப்பது அவசியம் குறித்து மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு திட்டங்களை கீழ்கண்டவாறு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

1. சென்னையில் உள்ள அனைத்து அரசாங்கக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் உடனடியாக பணிகளை மேற்கொள்வது குறித்து அந்தந்தத் துறை தலைவர்களுக்கு தனிப்பட்ட கடிதங்கள் அனுப்புதல்.
2. சென்னை நகரில் தனி வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வியாபார நிறுவனங்கள், கல்வி வளாகங்கள் மற்றும் சென்னை குடிநீர் வாரியகட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் சரியான முறையில் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதா என்று சரி பார்த்து தேவையான ஆலோசனைகளை வழங்கிட பராமரிப்புப் பணிகள் பற்றிய சுவரொட்டிகள் வழங்குதல்.
3. சென்னை குடிநீர் வாரியத்திற்கு உட்பட்ட 200 பிரிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பள்ளிகளை தேர்வு செய்து, அப்பள்ளிகளின்

மாணவ மாணவிகளை கொண்டு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல், மற்றும் மாணவர்களை பராமரிப்பு பணிக்கான தூதுவர்களாக்குதல்.

4. சென்னை குடிநீர் வாரிய அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பின் நன்மை மற்றும் பயன்கள் குறித்த பிரச்சார ஊர்திகள் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

5. பள்ளி மாணவ மாணவியர்களைக் கொண்டு சென்னை குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பின் அவசியம் பற்றிய கட்டுரை / கவிதை / ரங்கோலி மற்றும் சுவர் ஓவியப் போட்டிகள் நடத்தப் பெற்று பரிசுகள் வழங்குதல்.

6. சென்னை குடிநீர் வாரிய அலுவலகப் பணியாளர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணி மெரினா கடற்கரை சாலையில் நடத்துதல்.

7. மழைநீர் சேகரிப்பு முறைகள் மற்றும் பராமரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் அல்லது மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் செய்தியுடன், பிரபல நடிகை மற்றும் நடிகர்களைக் கொண்டு ஒரு குறும்படம் தயாரித்து அதனை தமிழக அரசின் கேபிள் டிவி மற்றும் திரையரங்குகளில் ஒளிபரப்புதல்.

மேற்கண்ட விழிப்புணர்வு திட்டத்தின் ஒரு பகுதியாக, மழைநீர் சேகரிப்பபின் அவசியம் குறித்த விழிப்புணர்வு பிரசார ஊர்தியை மாண்புமிகு தமிழக நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரசாரம், இன்று முதல் 15 நாட்களுக்கு, சென்னை குடிநீர் வாரிய அலுவலக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில், மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து 6 பிரச்சார ஊர்திகள் மூலம் தினமும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரையில், பொது மக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளது.

அனைத்து பொது மக்களும், இவ்வியக்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்கி தங்களது வீடுகளில் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரித்து, வரும் மழைகாலத்தில் மழைநீர் சேகரிப்பின் முழுப் பயனை பெற மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூடுதல் தலைமை செயலாளர் / மேலாண்மை இயக்குநர் திரு.அசோக் டோங்ரே இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர் இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரியத்தின் நிதி இயக்குநர் திரு.கே.முத்துக்குமாரசாமி, தலைமை

பொறியாளர் திரு.ஆர்.சிவசண்முகம் உள்ளிட்ட பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் அங்கு கூடியிருந்த செய்தியாளர்களிடம் தெரிவித்த விவரங்கள்**

**<u>உள்ளாட்சி அமைப்புகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்</u>**

- 2001–ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை அறிவித்தார்கள்.
- இதனால், நிலத்தடி நீர் மட்டம் பெரும் அளவில் உயர்ந்தது.
- இந்தியாவிலேயே – தமிழகம் முதல் மாநிலமாறக திகழ்கிறது.
- கட்டட அனுமதி வழங்குவதற்கு, அனைத்து கட்டடங்களிலும் "மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை" கட்டாயமாக்க சட்ட திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், நாளது தேதியில்,
- சென்னை மாநகரில் 9 இலட்சம் கட்டடங்களிலும்,
- பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், மொத்தமுள்ள 44.56 லட்சம் கட்டடங்களில், 38.86 லட்சம் கட்டடங்களிலும்,

- ❖ பேரூராட்சி பகுதிகளில் மொத்தமுள்ள **26.39** இலட்சம் கட்டடங்களில், **25.70** இலட்சம் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ❖ மழை நீர் சேகரிப்பு குறித்த **விழிப்புணர்வு முகாம்கள்** தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது.

- ❖ தமிழகத்தில், நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மூலம் **மொத்தம் 73,062 நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது.**

- ❖ கடந்த 5 ஆண்டுகளில் **(2011 –16)** நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மூலம் **51,709 நீர்நிலைகள், 2,326 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.**

- ❖ கடந்த 2 ஆண்டுகளில் மட்டும், **17,891 நீர்நிலைகளை** மேம்படுத்த, அரசு **1323 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு** செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

  - **மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில்,** கோவில் குளங்கள் உட்பட மொத்தமுள்ள **1,486 குளங்களில், 773 குளங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.**

  - **பேரூராட்சிகளில்** மொத்தமுள்ள **1,916 நீர்நிலைகளில் 1215 நீர்நிலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன.**

- அரியலூர், நாகப்பட்டினம், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை மற்றும் சாத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் ஈரோடு மாநகராட்சியில் **நீர்வளங்களை மேம்படுத்துவதற்காக ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதி (KfW) உதவியுடன் கீழ் ரூ.26.67 கோடி** நிதியினை அரசு **ஒதுக்கியுள்ளது.**

- **ஊரக உள்ளாட்சி அமைப்புகளில்,** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ்,

**21,649 சிறு கண்மாய்கள் மற்றும் 42,600 குளங்கள் தூர்**

**வாரப்பட்டுள்ளன**

- **கடந்த 5 ஆண்டுகளில், (2013–18** வரை**), இயற்கை வள மேம்பாட்டு** மற்றும் **நீர்** பாதுகாப்பு **பணிகள் ரூ. 16,948 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.**

- **50,000 பண்ணைக்குட்டை அமைக்கப்பட்டுள்ளன.**
  கடந்த 2 ஆண்டுகளில், ஊரகப் பகுதிகளில்,

- **30,000 தடுப்பணைகள்** கட்டும் பணிகளும்.

- மண் அரிப்பை தடுக்கவும், **15,000 கி.மீ நீளத்திற்கு மண் வரப்புகளும், 250 கி.மீ நீளத்திற்கு கல் வரப்பு** அமைக்கும் பணிகளும் **மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

- **4,00,500 உறிஞ்சு குழிகள்** அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பழுது அடைந்தவற்றை புனரமைக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| ஏரிகளின் இன்றைய நீர் இருப்பு (1.10.2018)ஏரி | மொத்த கொள்ளளவு | இன்றைய நீர் இருப்பு |
|---|---|---|
| | மில்லியன் கன அடி | |
| 1) பூண்டி | 3231 | 93 |
| 2) சோழவரம் | 1081 | 8 |
| 3) புழலேரி | 3300 | 478 |
| 4) செம்பரபாக்கம் | 3645 | 338 |
| மொத்தம் | 11257 | 917 |
| | | |
| 5) வீராணம் நீர் | 1465 | 806 |
| பெரு மொத்தம் | 12,722 | 1,723 |

- 5 ஏரிகளின் மொத்த கொள்ளளவில், 13.54 விழுக்காடு நீர் மட்டுமே ஏரிகளில் வந்துள்ளது. ( 1.72 TMC நீர்)

- 12.08.2018 முதல் வீராணம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு, சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு மொத்தம் 675 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகின்றது.

- கிருஷ்ணா நதி நீர் திட்டத்தின் மூலம் கண்டேலேறு அணையிலிருந்து கடந்த 22.09.2018 அன்று நீர் திறக்கப்பட்டு

**29.09.2018** முதல் பூண்டி நீர் தேக்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

- தற்போது பூண்டி நீர் தேக்கத்தில் 93 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்